**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்துார்.**

**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்துார்.**

**2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 06ம் நாள் திங்கள்கிழமை**

**Crlmp.No.407/2026**

C.பாப்பாத்தி .... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

1. A.K.கவிதா
2. K. சுபாஷ் .... 1, 2 எதிர்மனுதாரர்கள்
3. காவல் ஆய்வாளர், செம்பட்டி
4. காவல் கண்காணிப்பாளர், திண்டுக்கல் .....எதிர்மனுதாரர்கள்/அதிகாரிகள்

இம்மனு என் முன்னர் 06.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருS.யோகேஷ் பாண்டி அவர்கள் முன்னிலையாகியும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

**<u>உ த் த ர வு</u>**

அ) எதிர் தரப்பு காவல்துறையினர் விசாரணையை உடனடியாக முடித்து, இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள், செம்பட்டி காவல் நிலைய பதிவேட்டில் உள்ள முதல் தகவல் அறிக்கை எண் 274/2025–ல் இறுதி அறிக்கை/குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட வேண்டும் என்றும்,

ஆ) எதிர் தரப்பு காவல்துறையினருக்கு, சட்டப்படி, குற்றம் சாட்டப்பட்ட ஏ.கே.கவிதாவைக் கைது செய்வது உள்ளிட்ட நிர்ப்பந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிடுதல்; மற்றும்

c) AU ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியில் ஆதார் அட்டையை மோசடியாகத் தவறாகப் பயன்படுத்தியது மற்றும் கடன் கணக்குகளைச் சட்டவிரோதமாக மூடியது தொடர்பான புகாரின் பேரில் விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டியும் பிரிவு 193 BNSS–ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–

2.1) CRLMP.NO:3739/2024 வழக்கில் பிறப்பித்த உத்தரவின் மூலம், 06.08.2025 அன்று FIR முறையாகப் பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு, மனுதாரர் ஒவ்வொரு கட்டத்திலும் காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளித்தார். இருப்பினும், பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை, எதிர் தரப்பு காவல்துறையினர் விசாரணையும், இறுதி அறிக்கை/குற்றப்பத்திரிகையையும் தாக்கல் செய்யவும் இல்லை.

2.2) மேலும், விசாரணையின் முன்னேற்றம் மற்றும் குற்றப்பத்திரிகை தாக்கல் குறித்துக் கோரி மனுதாரர் எதிர் தரப்பு காவல்துறையை அணுகிய ஒவ்வொரு முறையும், விசாரணை அதிகாரி எந்தவித நியாயமுமின்றி மனுதாரரை அவதூறாகப் பேசி, திட்டி, அவமானப்படுத்தியதுடன், பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே காலை முதல் மாலை வரை காத்திருக்க வைத்தார்.

2.3) புலனாய்வு அதிகாரியின் செயலற்ற தன்மை மற்றும் முறைகேடான நடத்தையால் மனுதாரர் பாதிக்கப்பட்டார். எனவே, திண்டுக்கல் மாவட்டக் காவல்

கண்காணிப்பாளரிடம் எழுத்துப்பூர்வமாகப் புகார் அளித்ததுடன், புலனாய்வு அதிகாரியின் அந்தச் செயலற்ற தன்மை மற்றும் சட்டவிரோத நடத்தை குறித்து வாய்மொழியாகவும் விவரித்தார். அதன் பின்னரும் கூட, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, மேலும் விசாரணையும் நிறுத்தப்பட்டது.

2.4)விசாரணை சட்டவிரோதமாக நிலுவையில் வைக்கப்பட்டிருந்தபோது, குற்றம்சாட்டப்பட்ட ஏ.கே. கவிதா தனது சட்டவிரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். மேலும், இந்த இடைப்பட்ட காலத்தில், "ஃபின்கேர் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி" தனது பெயரை "ஏயு ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி" என மாற்றிக்கொண்டது.

2.5)காவல்துறையின் செயலற்ற தன்மையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, குற்றம்சாட்டப்பட்டவர் மீண்டும் மோசடியாக மேற்கூறிய "ஏயு ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியை" அணுகி, மனுதாரர் பெயரில் ஆள்மாறாட்டம் செய்து, மனுதாரரது அனுமதியோ ஒப்புதலோ இன்றி மனுதாரரது ஆதார் அட்டையைத் தவறாகப் பயன்படுத்தி, மனுதாரர் பெயரில் இருந்த கடன் கணக்குகளை முடக்கினார். ஏயு ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் அதிகாரி ஒருவர் மனுதாரரது ஆதார் அட்டையைக் காட்டி கடன்களை முடக்கியுள்ளதாகத் மனுதாரருக்கு தெரிவித்தனர். இது, குற்றம்சாட்டப்பட்டவர் அடையாளத் திருட்டு, ஆள்மாறாட்டம் மற்றும் தொடர்ச்சியான குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்பதைத் தெளிவாக நிறுவுகிறது.

2.6) மேலும் மனுதாரர் சமர்ப்பிப்பதாவது, கடன் தொகை செலுத்தப்பட்டதாகக் கருதினாலும் கூட, குற்றம்சாட்டப்பட்டவரின் முந்தைய மோசடிச் செயல்களின் காரணமாக மனுதாரரது சிபில் மதிப்பெண் ஏற்கனவே

சரிசெய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்து, மனுதாரருக்கு நீண்டகால உரிமையியல் மற்றும் நிதிப் பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

2.7) மேலும், மனுதாரரது ஒப்புதல், அதிகாரம் அல்லது முன்னிலையின்றி, மனுதாரர் பெயரில் உள்ள ஒரு கடனைக் கையாள்வதற்கோ அல்லது முடித்து வைப்பதற்கோ குற்றம்சாட்டப்பட்டவருக்கு எவ்வித சட்டப்பூர்வ உரிமையும் இல்லை.

2.8. இது சம்பந்தமாக செம்பட்டி காவல் நிலையத்தில் மற்றொரு புகாரைப் பதிவு செய்தார். இந்தப் புகாரின் பேரிலும் கூட, எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை, கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே, எதிர் தரப்பு காவல்துறையினரிடம் இருப்பது:

1. முதல் தகவல் அறிக்கை எண் 274/2025-இல் விசாரணையை முடிக்கத் தவறியது.

2. குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்யத் தவறியது

3. இறுதி அறிக்கை/குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யத் தவறியது

4. அடுத்தடுத்து நடந்த புலன் விசாரணைக்குரிய குற்றங்களை விசாரிக்கத் தவறியது

5. கடமையில் பெரும் அலட்சியம் காட்டும் வகையில் செயல்பட்டது

2.9. எனவே, நியாயமான மற்றும் காலவரையறைக்குட்பட்ட விசாரணைக்கான வழிகாட்டுதலைக் கோரி, BNSS, 2023 இன் பிரிவு 193 இன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

**5.1)** இம்மனுவில் பதிவு செய்யப்பட்ட செம்பட்டி காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையான 274/2025 வழக்கில் எதிர்மனுதாரர்/செம்பட்டி போலிசாருக்கு புலன் விசாரணையை உடனடியாக முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய காலஅளவுகளை நிர்ணயித்து உத்தரவிட வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்/செம்பட்டி போலிசாருக்கு இவ்வழக்கின் எதிரியான ஏ.கே.கவிதா என்பவரை கைது செய்து துரித நடவடிக்கையை சட்டப்படி எடுக்க வேண்டும் என்றும், மேலும், எதிர்மனுதாரர்/செம்பட்டி போலிசாருக்கு ஆதார் அடையாள அட்டையை மோசடியாக பயன்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக கடனை (AU Small Finance Bank)ஸ்மால் பைனான்ஸ் பேங்க் முடித்து வைத்தது சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டும், நீதிமன்றத்திற்கு தோன்றும் நியாயமான பிற உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்று நிகழ்நிலை புகார்தாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2) இந்த புகார்தாரர், அவர் கொடுத்த புகாரை செம்பட்டி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததால், இந்நீதிமன்றத்தில் பிரிவு 175(3) BNSS-ன் கீழ் தாக்கல் செய்து, அந்த மனு Crmp.No.3739/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அந்த குற்றபல்வகை மனுவில் கடந்த 24.01.2025-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் புகார்தாரர் கொடுத்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கையை பதிய செம்பட்டி காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவின் பேரில் புகார்தாரரின் புகார் மனுவின் மீது 318 BNS-ன் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கையை 1. கவிதா மற்றும் 2. சுபாஷ் ஆகியோர்களுக்கு எதிராக 06.08.2025-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது.

5.3) அந்த முதல் தகவல் அறிக்கையின் மீது, இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் தான் மேற்சொன்ன பரிகாரங்கள் கேட்டு நிகழ்நிலை புகார்தாரரான இம்மனுவின் புகார்தாரரால் இம்மனு மீண்டும் 193 BNSS –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.4) மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கையில் புலன் விசாரணை முடிந்து உரிய சட்டகாலத்திற்குள் இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. இருப்பினும், புலன் விசாரணையை முடித்து குறிப்பிட்ட தேதியில் இறுதியறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதித்துறை நடுவர் நீதிமன்றமாகிய இந்நீதிமன்றத்திற்கு புலன் விசாரணையில் தலையிடும் அதிகாரம் சட்டப்படி இந்நீதிமன்றத்திற்கு இல்லை. எனவே, மனுதாரர் கோரிய **முதல் பரிகாரத்தை இந்நீதிமன்றம் வழங்குவதற்கு சட்டப்படி அதிகாரம் இல்லை** என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.5) ஒரு வழக்கில் புலன் விசாரணை நிலுவையில் இருக்கும்போது, சம்பந்தப்பட்ட எதிரியை கைது செய்ய வேண்டுமா? மற்றும் அந்த வழக்கிற்கு குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்ய வேண்டியது அவசியமா? என்றும், கைது செய்யாவிட்டால் புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய புலன் விசாரணையை செய்ய முடியாது என்று அவர் தான் திருப்திக்கொள்ள வேண்டும். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை கைது செய்ய வேண்டியது முழுக்க முழுக்க புலன் விசாரணை அதிகாரியின் தன்னதிகாரத்தை சேர்ந்ததாகும். எனவே, புகார்தாரர் இம்மனுவில் கோரிய **2வது பரிகாரமும் சட்டப்படி கிடைக்கதக்கதல்ல** என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.6) இந்த புகார்தாரர் புகாரில் கோரிய 3வது பரிகாரத்தை பொறுத்து, தனியாக புகார் மனு கொடுத்துள்ளாரா? இல்லையா? என்பது பற்றி கூறவில்லை. மேலும், புலன் விசாரணை அதிகாரியை என்ன கோணத்தில் விசாரணை செய்ய வேண்டும் என்றும், யார் யாரையெல்லாம் விசாரணை செய்ய வேண்டும் என்றும், எந்த பொருண்மையை பொறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் புலன் விசாரணை அதிகாரத்தை தலையிட்டு சட்டப்படி உத்தரவிட முடியாது. இறுதியறிக்கை தாக்கல் செய்தால் தான் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்துள்ளாரா? இல்லையா? என்பது பற்றி நீதிமன்றம் தீர்மானிக்க இயலும். எனவே, புகார்தாரர் இந்த புகாரில் கோரியுள்ள 3வது பரிகாரத்திற்கான உத்தரவையும் தற்போதைய நிலையில், புலன் விசாரணை நிலுவையில் இருக்கும்போது, அத்தகைய உத்தரவை இந்நீதிமன்றம் சட்டப்படி வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.7) குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு இறுதியறிக்கையை தாக்கல் செய்ய சொல்லி உத்தரவிடும் அதிகாரம் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்திற்கே, நீதிபேராணை மனு தாக்கல் செய்வதன் மூலமும், தன்னதிகாரத்தின் மூலமும் உள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் கேட்க வேண்டிய பரிகாரத்தை புகார்தாரர் இந்த புகாரின் மூலம் இந்நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல.

5.8) புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான **M. SUBRAMANIAM & ANOTHER Vs S. JANAKI AND ANOTHER Dt. 20.03.2020** என்ற முன்தீர்ப்பில் **The Magistrate can also Monitor the**

**investigation** என்று கூறியுள்ளதால், மேற்படி முன்தீர்ப்பானது இவ்வழக்கின் பொருண்மைக்கு ஏற்றுக்கொள்ளதக்க வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.9) எனவே, செம்பட்டி காவல் நிலைய போலிசார் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 10 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், சட்டகாலத்தை கடந்து இறுதியறிக்கையை காவல் ஆய்வாளர், செம்பட்டி அவர்கள் தாக்கல் செய்யாததால், மேற்படி குற்ற எண். 274/2025 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு இதுநாள் வரை இறுதியறிக்கை தாக்கல் செய்யாமல் இருப்பதற்கான காரணத்தையும், புலன் விசாரணையின் தற்போதைய நிலை என்ன என்பதையும், அதற்கு புலன் விசாரணை அதிகாரி யார் என்பதையும், அவர் இந்த வழக்கில் இதுநாள்வரை மேற்கொண்ட புலன் விசாரணை பணிகள் என்ன என்பதை பொறுத்து, இந்த உத்தரவு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அறிக்கையாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று இதன்மூலம் உத்தரவிடுகிறது.

**முடிவில்,** செம்பட்டி காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவிட்டு, இந்த புகாரை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026 ம் நாளன்று ஜீலை திங்கள் 06–ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.10 17:06:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
ஆத்தூர்

**புகார்தாரர் தரப்பு சான்றவாணங்கள்:**

| வ.எண் | தேதி | ஆவணங்களின் விபரம் | தன்மை |
|---|---|---|---|
| 1. | 06.08.2025 | 3வது எதிர்மனுதாரரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது | நகல் |
| 2. | 20.08.2025 | மனுதாரர் முதல் தகவல் அறிக்கை FIR.No.274/2025 நகல் பதிவின் விசாரணையை முடிக்குமாறு 4வது எதிர்மனுதாரருக்கு ஒரு புகாரை அளித்தார் | நகல் |
| 3. | 20.08.2025 | 4வது எதிர்மனுதாரர், மனுதாரரின் புகாருக்கான ரசீது | நகல் |
| 4. | 22.01.2026 | மனுதாரர், குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக 3வது எதிர்மனுதாரருக்கு புதிய புகாரை அளித்தார். | நகல் |
| 5. | 22.01.2026 | AU ஸ்மால் பைனான்ஸ் வங்கியின் வங்கி அறிக்கை | நகல் |

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.10 17:06:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஆத்தூர்.